தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

19.07.2013

**இந்தியாவின் பருவ மழைகள்**

இந்த ஆண்டு நம் நாட்டில் தென் மேற்குப் பருவ மழை பலவிடங்களில் வழக்கத்தைவிட அதிகமாகவே பெய்திருக்கிறது. தென்மேற்கிலிருந்து வீசும் காற்றில் ஏறி வருவதால் அதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. வழக்கமாக தென் மேற்குப் பருவ மழை மே இறுதியில் துவங்கி செப்டம்பர் வரை நீடிக்கும்.

ஆண்டுதோறும் தென்மேற்குப் பருவ மழை பெய்வதென்பது சுமார் ஆறு முதல் எட்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் துவங்கியிருக்க வேண்டும் என வானிலை அறிவியலார் அனுமானிக்கின்றார்கள். இந்தியத் துணைக் கண்டத்தை ஒட்டிய கடலில் தரையைக் குடைந்து ஆராய்ந்த விஞ்ஞானிகள் அதிலிருந்த டயாட்டம் என்னும் ஒற்றை ப்ஸல் தாவரம், ரேடியோலாரியா என்னும் ஒற்றை ப்ஸல் உயிரி ஆகியவற்றின் புதைப் படிவங்களைப் பகுப்பாய்வு செய்தனர்.

கடலில் அலைகள் கொந்தளித்து எழும் வகையில் மணிக்கு சுமார் 50 கி.மீ. வேகத்தில் பருவக் காற்று வீசுகையில் இந்த நுண் உயிரிகள் கடலின் மேற்பரப்பில் வீசப்படுகின்றன. அவை இறந்த பின் அவற்றின் சடலங்கள் கடலடித் தரையில் இறங்கி அடுக்குப் படலங்களாக ஆகின்றன. அந்த அடுக்குகளின் அடிமட்டப் படலங்களிலுள்ள உயிரி புதைப் படிவங்கள் ஆறு முதல் எட்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கண்டறியப்பட்டது. இமயமலை, திபேத் பீடபூமி ஆகியவையும் இதே கால கட்டத்தில்தான் தோன்றின. எனவே அவை

உருவான பின்னர்தான் பருவ மழைகளும் துவங்கியிருக்க வேண்டும் என அறிவியலார் கருதுகிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டம் அமைந்துள்ள கண்டத் தகடு வடக்கில் பயணித்து ஆசியக் கண்டத் தகட்டுடன் மோதியபோது அவற்றின் விளிம்புகள் மேல் நோக்கி வளைந்து எழும்பியதால் இமயமலைத் தொடரும் திபேத் பீடபூமியும் தோன்றின. கோடையில் வெப்பமும் உயரமும் அதிகமான திபேத் பீட பூமியின் தென் புறத்தில் வெப்பம் குறைந்த இந்தியக் கடல் உள்ளதால் தெற்காசிய நிலப் பிராந்தியத்திலிருந்து சூடான காற்று வானில் எழுகிறது. அது இருந்த இடத்தை இட்டு நிரப்புவதற்காக இந்து மாக்கடலிலிருந்து ஈரக்காற்று வீசுகிறது. அது தென் மேற்குப் பருவக் காற்றாக மழையைச் சுமந்து வருகிறது.

இதற்கு நேர் மாறாக குளிர்காலத்தில் வடகிழக்கிலுள்ள நிலப்பரப்பிலிருந்து காற்று கடலை நோக்கி நவம்பர் மாத வாக்கில் வீசத் தொடங்கும். வங்கக் கடலைக் கடந்து வரும் இக்காற்று இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் மழையைப் பொழிவிக்கிறது.

இமயமலைத் தொடர் 1.5 முதல் இரண்டு கோடியாண்டுகளுக்கு முன் மேலெழும்பத் தொடங்கி ஆறு முதல் எட்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இன்றிருக்கும் அளவுக்கு உயர்ந்து தென்மேற்கிலிருந்தும் வடகிழக்கிலிருந்தும் வீசிய காற்றுகளை மடக்கிப் பருவமழைக் காற்றுகளாக மாற்றியிருக்க வேண்டும் என அறிவியலார் கருதுகிறார்கள்.

உலகிலேயே இந்தியத் துணைக் கண்டத்திலும் தெற்காசியப் பகுதிகளிலும்தான் தீவிரமான பருவ மழைக் காற்றுகள் வீசுகின்றன. "மெப்சிம்' என்ற அரபுச் சொல்லுக்கு ""ஒரு குறிப்பிட்ட பருவம்'' என்று பொருள். அது ஆங்கிலத்தில் "மான்சூன்' என உருமாறியது. ஆறு, ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அராபிய மாலுமிகள் தென்மேற்கிலிருந்தும் வடகிழக்கிலிருந்தும் பருவத்துக்குப் பருவம் திசை மாறி வீசுகிற காற்றுகளை இச் சொல்லால் அழைக்கத் தொடங்கினர். இந்தியாவில் மான்சூன் என்பது பருவ மழையையே குறிக்கிறது. இந்தியாவின்

விவசாயமும் பொருளாதாரமும் பருவமழைகளை நம்பியிருப்பவை. இதன் காரணமாகவே இந்தியத் துணைக் கண்டம் பருவமழை நாடு என்று அழைக்கப்படுகின்றது.

கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதியில் கோடை காலத்தில் நிலப்பரப்பு கடலை விட அதிகச் சூடாகவும் குளிர்காலத்தில் கடலை விட அதிகக் குளிர்ச்சியாகவும் ஆகிறது. கோடையில் கடலிலிருந்தும் குளிர்காலத்தில் நிலத்திலிருந்தும் காற்றுகள் வெப்பச் சலனம் காரணமாகத் தென்மேற்குத் திசையிலிருந்தும் வடகிழக்குத் திசையிலிருந்தும் வீசத் தொடங்குகின்றன. நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசும் காற்று பின்வாங்கும் பருவக் காற்று எனப்படும்.

நம் நாட்டில் விவசாயத்திலும் பொருளாதாரத்திலும் பருவமழையின் தாக்கம் கணிசமானது. பருவமழை பொய்க்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்த பிறகே நம் நாட்டு நிதி மந்திரிகள் ஒவ்வோராண்டும் வரவு செலவு அறிக்கையை எழுதத் தொடங்குகிறார்கள். பருவ மழை சரிவரப் பெய்தால்தான் ஆறுகளிலும் ஏரிகளிலும் குளங்களிலும் நீர் பெருகி விவசாயத்துக்கும் மின் உற்பத்திக்கும் உதவும். பருவ மழை பொய்த்தால் நாடே தவித்துப் போய் அரசுகள் ஆட்டம் காணத் தொடங்கி விடும்.

பருவக் காற்று மழையை முழுமையாக நம்ப முடிவதில்லை. 1970-இல் பருவ மழை பொய்த்து பெரும் வறட்சி தோன்றியது. அடிக்கடி கனமழை கொட்டி வெள்ளப் பெருக்கெடுக்கும் மாநிலங்களில் கூடச் சில ஆண்டுகளில் மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டதுண்டு. சில ஆண்டுகளில் வறண்ட பாலைவனங்களில் கனமழை கொட்டி வெள்ளம் வந்து உயிருக்கும் உடைமைகளுக்கும் சேதமேற்படுத்தியதுமுண்டு.

மழையளவில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களையும் பருவ மழையின் கால அட்டவணையை உறுதியாக நிர்ணயிக்க முடியாததையும் கருத்தில் கொண்டு அரசு பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிற போதிலும்

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்டதைப் போன்ற பேரிடர்கள் ஏற்பட்டு விடுகின்றன. பருவ மழையின் போக்கைக் கண்காணிக்கிற ராக்கெட்டுகளும், பலூன்களும் செயற்கைக் கோள்களும் பருவமழையைத் தீர்மானிக்கிற இயற்கைச் செயல்பாடுகளைப் பற்றி உடனுக்குடன் வானிலை மையங்களுக்குத் தகவல்களை அனுப்பியவாறு உள்ளன. என்றாலும் ""ஓரிரு இடங்களில் லேசான அல்லது பலத்த அல்லது நடுத்தரமான மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது" என்ற அளவில்தான் வானிலை முன்னறிவிப்புச் செய்ய முடிகிறது.

ஜூன் மாதம் தொடங்கியதுமே இந்திய விவசாயிகள் ஆவலுடன் வானத்தைப் பார்க்கத் தொடங்கி விடுகிறார்கள் தொலைக்காட்சிகளும் வானொலியும் செய்தித்தாள்களும் "வரப் போகிறது', "வந்து கொண்டிருக்கிறது', "வந்து விட்டது' என்று பருவ மழை பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. பருவமழையின் விஜயமே கருத்த பெரும் மேகங்களும் புயல்களும், இடி மின்னல்களும் பங்கு கொள்ளும் ஒரு பிரமிப்பூட்டும் நாடகக் காட்சியாக உள்ளது. பருவமழை பொழிவதை வேடிக்கை பார்ப்பதற்காகவே அரபு நாட்டுப் பயணிகள் இந்தியாவின் மேற்குக் கரை நகரங்களுக்கு வருகிறார்கள்.

ஆனால் பல ஆண்டுகளில் பருவ மழை இவ்வளவு அமர்க்களத்துடன் தொடங்குவதில்லை. முதலில் வெயிலின் உக்கிரம் அதிகமாகிறது. பிறகு லேசாகத் தூறல் தொடங்குகிறது. பின்னர் சில நாள்களுக்கு மப்பும் மந்தாரமுமாக இருந்துவிட்டு படிப்படியாக மழை வலுக்கத் தொடங்குகிறது. ஆனால் அசாம், வங்காளம், ஒடிசா, பிகார் ஆகியவிடங்களில் பருவமழை தொடங்குவதற்கு முன்பே ஏப்ரல், மே மாதங்களில் பயங்கரமான இடி மின்னல்களுடன் கூடிய புயல்கள் வீசும். இதை "காலா பைசாகி' என்கிறார்கள். இவை வளிமண்டலத்தில் கடும் குழப்பங்கள் ஏற்பட்டதன் அறிகுறி. சில ஆண்டுகளில் இத்தகைய இடியும் புயலும் கடுமையாகத் தோன்றும்போது மழையும் பெய்து பருவமழை எப்போது தொடங்கியது என்பதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை.

பருவமழை பொதுவாக அரபிக் கடல் பருவமழை, வங்கக் கடல் பருவமழை எனப் பிரிக்கப்படுகிறது. அரபிக் கடல் பருவமழை வழக்கமாக ஜூன் முதல் வாரத்தில் கேரளக் கடற்கரையை எட்டும். பின்னர் ஜூன் இரண்டாவது வாரத்தில் மும்பையை அடையும். அசாதாரணமான வளிமண்டலக் குழப்பங்களின் காரணமாகப் பருவமழை சில நாட்கள் முன்போ, பின்போ வரலாம்.

வங்கக் கடல் பருவமழை வடமேற்காகப் பயணித்து அசாம், வங்காளம் ஆகியவிடங்களுக்கு ஜூன் முதல் வாரத்தில் வந்து விடும். இமய மதிலின் தென் விளிம்பில் அது மோதி மேற்கே திரும்பும். அங்கிருந்து அது கங்கைச் சமவெளியை நோக்கிப் பயணிக்கும். பருவமழை மும்பையை விடச் சற்று முன்னதாகவே கொல்கத்தாவுக்கு வந்து விடும். அது வழக்கமாக ஜூன் முதல் வார முடிவில் கொல்கத்தாவை அடைகிறது.

அரபிக் கடல் பருவமழை ஜூன் மத்தியில் இந்தியாவின் மத்திய மாநிலங்களில் பரவுகிறது. அதன் பின் வங்கக் கடல் காற்றோட்டமும் அரபிக் கடல் காற்றோட்டமும் ஒன்றாகக் கலந்து உத்தரப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் ஜூன் இறுதி அல்லது ஜூலை முதல் வாரத்தில் பருவமழையாகப் பொழியத் தொடங்கும்.

டெல்லிக்குப் பருவமழை வருவது விந்தையாக இருக்கும். முதல் மழை கிழக்கிலிருந்தும் சமயங்களில் தெற்கிலிருந்தும் மாறி மாறி வரும். ஜூலை நடுவில் அது காஷ்மீருக்கும் ஹிமாசலப் பிரதேசத்துக்கும் பரவி விடும். அவ்விடங்களில் இரண்டு மூன்று மாதங்களுக்கு மழை நீடிக்கும்.

மலைத் தொடர்கள் பருவமழையின் போக்கை வெகுவாகப் பாதிக்கின்றன. வங்கக் கடல் பருவமழை கரையைக் கடந்ததும் அசாமின் குன்றுகளாலும், காரோ, ஜயந்தியா மலைகளாலும் மேற்குத் திசையில் திருப்பி விடப்படுகிறது. அதன் காரணமாக அசாமுக்கு ஏராளமாக மழை கிடைக்கிறது. மீதமுள்ள பருவமழையை இமயத் தொடர் மேலும் மேற்கில் திருப்பிவிட்டு சிக்கிம் முதல் காஷ்மீர் வரை தொடர்ந்து மழை பெய்யச் செய்கிறது.

தென் பகுதியில் ஒன்று முதல் இரண்டு கிலோ மீட்டர் வரை உயரமான முகடுகளைக் கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலைகள் அரபிக் கடல் பருவக் காற்றை மறித்துப் பெருமளவு மழையைக் கறந்து விடுகின்றன. மீதமுள்ளதே தக்காணத்துக்கும் மத்தியப் பிரதேசத்துக்கும் போகிறது.

பல நூற்றாண்டுகளாகவே அரபு வணிகர்கள் தென்மேற்குப் பருவக் காற்றின் உதவியுடன் பாய்மரக் கப்பல்களைச் செலுத்தி மலையாளக் கரைக்கு வந்து வியாபாரம் செய்து விட்டு வடகிழக்குப் பருவக் காற்றின் உதவியுடன் அரேபியாவுக்குத் திரும்பிப் போய் விடுவார்கள். அதன் காரணமாக அவற்றுக்கு வணிகக் காற்றுகள் என்ற பெயரும் வழங்கப்பட்டது.

தமிழ் மன்னர்களும் தெற்காசிய நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்லப் பருவக்காற்றுகள் உதவியிருக்கும். ஆஸ்திரேலியா, நியூசிலாந்து வரை கூட தமிழ் வணிகர்களின் பாய்மரக் கலங்கள் சென்றிருக்க வாய்ப்புண்டு. இந்தோனேசியா, பாலி போன்ற நாடுகளில் இந்திய மதங்களும் கலாசாரமும் பரவிட பருவக் காற்றுகள் உதவியுள்ளன.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் வெள்ளிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி, சின்னக்கல்லாற்றில் 50 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அறந்தாங்கி, வால்பாறையில் 40 மி.மீ. மழையும், தேவலா, பெரியாறு, குளச்சல் ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

நடுவட்டம், சீர்காழி ஆகிய பகுதிகளில் 20 மி.மீ. மழையும், குழித்துறை, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திருவள்ளூர், பூண்டி, பொள்ளாச்சி, கொள்ளிடம்,

கூடலூர், தேவக்கோட்டை, காட்டுமன்னார்கோயில் ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**இயற்கையின் கொடையால் இலக்கை எட்டியது குறுவை சாகுபடி**



பரவலான மழை, தடையில்லா மும்முனை மின்சாரம், வெயிலின் தாக்கம் குறைந்தது போன்ற காரணங்களால் கடலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடியும், டெல்டா அல்லாத பகுதிகளில் சொர்ணவாரி பட்ட சாகுபடியும் இலக்கை எட்டியுள்ளன.

கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் மற்றும் கடலூர் வருவாய் வட்டத்தில் ஒரு பகுதி என 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரிப் பாசனப் பகுதிகள். இதில் வீராணம் நேரடிப் பாசனம் மட்டும் 44 ஆயிரம் ஏக்கர். தற்போது வீராணம் ஏரி வறண்டு கிடக்கிறது.

காவிரி நதிநீர்ப் பிரச்னை தொடங்குவதற்கு முன், ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும்.

இதனால் கடலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் 10 லட்சம் ஏக்கருக்கு மேல் குறுவை நெல் சாகுபடியும், 18 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடியும் நடைபெற்று வந்தது.

கடந்த 15 ஆண்டுகளில் ஒரு சில ஆண்டுகள் தவிர, மற்ற ஆண்டுகளில் குறுவை சாகுபடி என்பது முற்றிலும் மறைந்து போயிற்று.

சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாக மாறி வருகிறது. கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் மேட்டூர் அணை நீர்மட்டம் கிட்டத்தட்ட 75 அடியை எட்டியுள்ளது.

சம்பா சாகுபடிக்கு ஆகஸ்ட் 15-க்குப் பிறகு மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது. அப்போது அணையின் நீர்மட்டம் 100 அடிக்கு மேல் வந்துவிடும் என்றும் பருவமழையும் பரவலாக பெய்ய தொடங்கிவிடும் என்பதால் இந்த ஆண்டு சம்பா சாகுபடி ஏறத்தாழ உறுதியாகியுள்ளது என விவசாயிகள் நம்புகின்றனர்.

குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படாத நிலையில் கடலூர் மாவட்டத்தில் டெல்டா விவசாயிகள் நிலத்தடி நீரை நம்பி நடவுப் பணிகளை மேற்கொண்டனர். மே மாதம் நடவுப் பணிகளை தொடங்கிய நிலையில், இரண்டு மாதங்களாக கொளுத்திய வெயில், மின்வெட்டு போன்ற காரணங்களால் விவசாயிகள் தொடர்ந்து நடவுப் பணிகளை மேற்கொள்ள தயங்கினர்.

இதனால் கடந்த மாதம் இறுதிவரை 10 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே நடவுப் பணிகள் முடிந்திருந்தன.

இதற்கு மேல் நெல் நடவுக்கு சாத்தியமில்லை என்று கருதிய நிலையில், கடந்த 20 நாள்களாக பரவலாக பெய்து வரும் மழை, தடையில்லாமல் வழங்கப்படும் மின்சாரம் போன்ற காரணங்களால் டெல்டா பாசனப் பகுதிகளில் கடந்த 15 நாள்களில் மட்டும் 14 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் மூலம் டெல்டாவில் இதுவரை 24 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. இதனால் நடப்பு ஆண்டுக்கான இலக்கை விஞ்சி

விட்டதாகவும், இதுபோல் டெல்டா அல்லாத பகுதிகளிலும் இதுவரை 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் நடவு செய்யப்பட்டுள்ளதாகவும் வேளாண் இணை இயக்குநர் டி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது குறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "பரவலான மழை, தடையில்லா மும்முனை மின்சாரம், வெயிலின் தாக்கம் குறைந்தது போன்ற காரணங்களால் கடலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடியும், டெல்டா அல்லாத பகுதிகளில் சொர்ணவாரி சாகுபடியும் இலக்கை எட்டியுள்ளன.

இந்த மாதம் முழுவதும் நடவுப் பணிகள் நடைபெறும் என்பதால் நேரடி நெல் விதைப்பின் மூலம் விவசாயிகள் நடவுப் பணிகளை மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

குறுவை சாகுபடிக்கு இயற்கை வழிகாட்டியதுபோல், சம்பா சாகுபடிக்கு ஆகஸ்ட் மாத இறுதிக்குள் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். இப்போது அணையின் நீர் இருப்பு, நீர்வரத்து ஆகியவற்றை கணக்கிட்டால் சம்பாவுக்கு உரிய காலத்தில் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது என்றார்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் இன்று மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி, சின்னக்கல்லாற்றில் 50 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அறந்தாங்கி, வால்பாறையில் 40 மி.மீ. மழையும், தேவலா, பெரியாறு, குளச்சல் ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

நடுவட்டம், சீர்காழி ஆகிய பகுதிகளில் 20 மி.மீ. மழையும், குழித்துறை, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திருவள்ளூர், பூண்டி, பொள்ளாச்சி, கொள்ளிடம், கூடலூர், தேவக்கோட்டை, காட்டுமன்னார்கோயில் ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 73.52 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 73.52 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 13,235 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**வறட்சியால் சோளத்தட்டை விலை உயர்வு**

வறட்சி காரணமாக கால்நடை தீவனமான சோளத்தட்டையின் விலை 3 மடங்கு உயர்ந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழைப் பயிர்கள் காவிரி மற்றும் அமராவதி ஆற்றுப் பாசனத்தின் மூலம் சாகுபடி செய்யப்படுகின்றன. சில பகுதிகளில் ஆழ்துளை கிணறு மூலமும் விவசாயம் நடைபெறுகிறது.

ஆனால் நிகழாண்டில் பருவமழை பொய்த்தது மற்றும் வறட்சி காரணமாக வழக்கமான நெல், கரும்பு சாகுபடி இல்லை. சூறைக் காற்றால் வாழை மரங்களும் சேதமடைந்ததால் விவசாயிகள் பாதிப்புக்குளாகினர்.

நெல் சாகுபடி போதிய அளவில் இல்லாததால் கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படும் வைக்கோல் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கரூர் மாவட்டத்தில் காவிரி மற்றும் அமராவதி ஆற்றுப் பாசனப் பகுதிகளான வாங்கல், நெரூர், புகழூர், வேலாயுதம்பாளையம் போன்ற பகுதிகளில்

விவசாயிகள் சோளத்தட்டையைப் பயிரிட்டுள்ளனர்.

""இதற்கு முதல் 20 நாள்களுக்கு மட்டும் தொடர்ந்து தண்ணீர் தேவைப்படும், பின்னர் தண்ணீர் அதிகம் தேவையில்லை. வாரத்துக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சலாம் என்பதால், ஆழ்துளை கிணறு மூலம் கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தி வருகிறோம்'' என்கிறார் பஞ்சமாதேவியைச் சேர்ந்த விவசாயி சம்பத்.

விலையும் உயர்வு: 15 கட்டுகள் கொண்ட விசு ( ஒரு கட்டு 5 முழம் கயிற்றைக் கொண்டு கட்டடப்படுவது) விலை சென்ற ஆண்டில் ரூ.200 வரை விற்பனையானது. ஆனால், நிகழாண்டில் குறைந்த அளவில் பயிரிடப்பட்டுள்ள நிலையில் தேவை அதிகமாக இருப்பதால் 15 கட்டுகள் கொண்ட விசுவின் விலை ரூ.650 வரை விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது காவிரி, அமராவதி ஆறுகளில் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதையடுத்து ஆழ்துளை கிணறு மூலம் பாசனம் செய்யும் விவசாயிகள் தற்போது சோளத்தட்டை பயிரிட்டு வருகின்றனர். சோளத்தட்டை வரத்து அதிகம் வரும் வரை விலை இந்த நிலையிலேயே நீடிக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

குத்தகைக்கும் உண்டு:

""கரூர் மாவட்டத்தில் சோளத்தட்டை பயிரிட்டுள்ள நிலங்களின் உரிமையாளர்களை நேரில் அணுகும் மொத்த வியாபாரிகள், ஏக்கருக்கு தோராயமாக ரூ.40,000 வரை விலை பேசி முடிவு செய்கின்றனர். இதன் காரணமாக சோளத்தட்டையின் சிறுகட்டு விலை சென்ற ஆண்டு ரூ.2 முதல் 5 வரை விற்பனையானது. ஆனால் நிகழாண்டில் ரூ.10-க்கு மேல்தான் விற்பனை செய்யப்பட்டு வருகிறது'' என்கிறார் வியாபாரி முனியம்மாள்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்: இடம் மாற்றம்**

கரூர் மாவட்டம், குளித்தலையில் வெள்ளிக்கிழமை (ஜூலை 19) நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நிர்வாகக் காரணங்களுக்காக கரூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறும் என்றும், விவசாயம் தொடர்பான குறைகளை இக்கூட்டத்தில் பங்கேற்று தெரிவிக்கலாம் எனவும் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

**மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்து விநியோகம்**

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் காரிப் பருவத்துக்குத் தேவையான பயிர் பாதுகாப்பு விதைகள், மருந்துகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளதாக, வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்தர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

காரீப் பருவத்திற்குத் தேவையான அனைத்துப் பயறு வகை விதைகளான துவரை, உளுந்து, காராமணி, பச்சைப் பயிறு, கொள்ளு மற்றும் தானிய விதைகளான ராகி, நெல் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளான உயிரியல் பூச்சிக் கொல்லி, பூஞ்ஞானக் கொல்லி ஆகியவை மானிய விலையில் வழங்கத் தயார் நிலையில் உள்ளன. விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விவசாயிகள் தங்கள் நிலங்களை மண் பரிசோதனை செய்யத் தேவைப்படும் ஆவணங்களான நிலத்தின் சிட்டா, குடும்ப அட்டையின் நகல் மற்றும் புகைப்படம் ஆகியவற்றோடு ஒரு மண் மாதிரிக்கு ரூ.20 வீதம் செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உணவு தானியத் திட்டத்தில் பதிவு செய்ய வலியுறுத்தல்**

பர்கூர் வட்டாரத்திலுள்ள விவசாயிகள் உணவு தானியத் திட்டத்தில் பயன்பெற தங்களது விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும் என, பர்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட

செய்திக் குறிப்பு:

உணவு தானிய இயக்கத் திட்டத்தின் கீழ் பயன்பெறவும், பண்ணைசார் பயிர் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கவும், விவசாயிகளின் அடிப்படை விவரங்கள் சேகரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் தங்கள் பகுதிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உழவர் நண்பர்களிடம் தங்களுடைய அடிப்படை விவரங்கள் மற்றும் தங்கள் நிலத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை கொடுத்து பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், இனி வருங்காலங்களில் இணைய தளத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு அடையாள எண் வழங்கப்பட்டு வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானியங்கள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், பர்கூர். தொலைபேசி எண்: 04343-265092 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு தேனி வளர்ப்புப் பயிற்சி**

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் வட்டாரத்தில் வேளாண் துறை சார்பில், அட்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தேனி வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

வெண்ணந்தூர் அடுத்துள்ள சித்தாளந்தூர் கிராமத்தில் விவசாயி ராதாகிருஷ்ணன் தோட்டத்தில் இந்தப் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது. பயிற்சியில் அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளரும், வேளாண் உதவி இயக்குநருமான கு.சீனிவாசன், அட்மா தலைவர் எஸ்.பி.தாமோதரன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர்.

தேனி வளர்ப்புப் பயிற்சி, தேனி வளர்ப்பின் பயன்கள், தேனி சேகரிப்பு முறைகள், தேனிக்கள் வகைகள் போன்றவை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

அட்மா திட்ட மேலாளர் ரமேஷ், தொழில் நுட்ப வல்லுநர் டி.ஜமுனா ராணி ஆகியோர் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். மேலும், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

**ஏலத்துக்கு பருத்தி வரத்து அதிகரிப்பு**

நாமக்கல் சுற்று வட்டாரப் பகுதிகள், மற்றும் அண்டை மாவட்டங்களில் தற்போது பருத்தி அறுவடை தொடங்கியுள்ளதால், நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்க ஏலத்துக்கு கடந்த இரு வாரங்களாக பருத்தி வரத்து அதிகரித்துள்ளது.

நாமக்கல் வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரம்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. ஏலத்துக்கு நாமக்கல் மட்டுமன்றி அருகேயுள்ள சேலம், துறையூர், தொட்டியம் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

அதன்படி, வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1800 மூட்டைகள் பருத்தி வரப்பெற்றன. அவற்றில் ஆர்சிஹெச் ரக பருத்தி, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,850 முதல் ரூ.5,359 வரையும், சுரபி ரகம் ரூ.6,205 முதல் ரூ.7,139 வரையும் விற்பனையானது. மொத்தம்

ரூ.40 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

ஆனால், கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1300 மூட்டை பருத்திகள் வரப்பெற்றதில் ஆர்சிஹெச் ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,900 முதல் ரூ.5,386 வரையும், சுரபி ரகம் ரூ.5,950 முதல் ரூ.6,700 வரையும் விற்பனையானது. இதில் ரூ.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

அதற்கு முந்தைய வாரம் (ஜூலை 4) நடைபெற்ற ஏலத்துக்கு ஆயிரம் மூட்டைகள் பருத்தி வரப்பெற்று ரூ.18 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் தற்போது பருத்தி அறுவடை சீசன் தொடங்கியுள்ளதால், கடந்த இரு வாரங்களாக ஏலத்துக்கு பருத்தி வரத்து அதிகரித்து வருவதாகவும், இது அடுத்த இரு மாதங்களுக்கு மேலும் கூடும் என்றும் அலுவலர்கள் தெரிவித்தனர்.

**கூடுதல் விலைக்கு தேங்காய்கள் கொள்முதல்**

விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் 1000 தேங்காய்களுக்கு மார்க்கெட் விலையைவிட ரூ.100 வரை அதிகம் கொடுப்பது என குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கம் முடிவு செய்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் ஜே.கே.என். பழனி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில், மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பது, சங்கம் சார்பில் நடத்தப்படும் நகர்ப்புற ரேஷன் கடைகளில் தரமான தேங்காய்களை ரூ.6 முதல் விற்பனை செய்வது, சங்கம் சார்பில் நடத்தப்படும் மருந்துக் கடையை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் திறந்துவைத்து 12 சதவீதம் தள்ளுபடி விலையில் மருந்துகளை விற்பது என்பன உள்ளிட்ட

தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.துணைத் தலைவர் எஸ். கோதண்டன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 64.56 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 64.56 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,993 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 8.82 டி.எம்.சி.

**"விலை' நிலங்களாக மாறும் விளைநிலங்கள்!**

தாராபுரம் பகுதியில் உள்ள விவசாய விளைநிலங்கள் பெரும்பாலானவை அழிக்கப்பட்டு குடியிருப்பு பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

இதைத் தடுக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாராபுரம் உடுமலை சாலை, பொள்ளாச்சி சாலை, அலங்கியம் சாலை பகுதிகளில் நகரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம் முதல் முற்றிலும் விவசாய பூமிகளாக இருந்து வந்தது. இதில் அமராவதி பாசனம் மூலம் இருபோக நெல் சாகுபடி செய்து வந்த நிலையில், பருவமழை பொய்த்து வறட்சி ஏற்பட்டதால், கடந்த 4 ஆண்டுகளாகவே ஒருபோக நெல்சாகுபடி மட்டுமே நடைபெற்றது. இந் நிலையில், கடந்த ஆண்டு அமராவதி அணை நிரம்பாததால், ஒருபோக நெல் சாகுபடியும் மேற்கொள்ள முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இதன் காரணமாக தங்களுக்கு சொந்தமான விளைநிலங்களை நல்ல விலைக்கு ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் விற்றுவிட்டு விவசாயத்தையே கைவிட்டு விவசாயிகள் சென்றுவிட்டனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பச்சைபசேலென காட்சியளித்த வயல்வெளிகள் குடியிருப்புகளாக மாறி காட்சியளிக்கிறது. வீட்டுமனைகள் விற்பனை செய்யும் போது உள்ளாட்சி நிர்வாகத்திடம் இருந்து அங்கீகாரம் பெற்றால் மட்டுமே குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்ற விதியை ரியல் எஸ்டேட் அதிபர்கள் பின்பற்றுவதில்லை.

குடியிருப்புகள் கட்டுமானப் பணி பாதி நிறைவுற்ற பின் அடிப்படை வசதிகள் கோரி உள்ளாட்சி நிர்வாகத்தை அணுகும் போதே இதுகுறித்த விவரங்கள் இடம் வாங்கியவர்களுக்கு தெரியவருகிறது.

இதுகுறித்து தாராபுரம் நகர்மன்ற உறுப்பினர் வெ.கமலக்கண்ணன் கூறியது: தாராபுரம் தலைமை நீரேற்று நிலையத்துக்கு செல்லும் வழியில் உள்ள வயல்வெளிகள் அழிக்கப்பட்டு குடியிருப்புகளாக மாறி வருகிறது. இதைத் தடுக்க நகராட்சி கூட்டத்தில் பலமுறை வலியுறுத்தியும், பயனில்லை. அனுமதி பெறாமல் சட்டத்துக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள இந்தக் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை நகராட்சி நிர்வாகம் செய்து கொடுக்க வாய்ப்பில்லை. இதன் காரணமாக, குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் அருகே உள்ள அமராவதி ஆற்றில் கலக்க வாய்ப்புள்ளது.

அமராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலத்தில் இந்தக் குடியிருப்புகள் பாதிக்கப்படும் அபாயமும் நிலவுகிறது. எனவே நகராட்சி நிர்வாகம் இனியாவது காலம் தாழ்த்தாமல், இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**விவசாயிகள் உரம் வாங்கும் போது ரசீது வாங்க வேண்டியது அவசியம்**

விவசாயிகள் உரங்களை வாங்கும் போது தவறாமல் ரசீதினை கேட்டு பெறுமாறும், மூட்டையில் உள்ள விற்பனை விலையினை சரி பார்த்து வாங்க வேண்டியதும் அவசியமாகும் என ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் க. சக்திமோகன் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயத்துக்கு தேவையான முக்கிய இடுபொருள்களான உரங்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு ரூ. 150 கோடி டான்பெட் நிறுவனத்துக்கு வட்டியில்லா முன்பணம் வழங்கியிருக்கிறது.

இதனை கொண்டு டான்பெட் நிறுவனம் டிஏபி உரத்தினை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் விநியோகம் செய்து வருகிறது. இது தவிர தமிழக அரசு உரங்களின் மீதான 4 சதவீத மதிப்பு கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்களித்துள்ளது.

இதன் மூலம் 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ. 11 முதல் ரூ. 52 வரை உரங்களின் விலை குறைந்துள்ளது. தற்போது யூரியா உரங்கள் மட்டும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் அதிக அளவில் யூரியா உரத்தினை வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

மேலும் யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை மட்டும் இட்டு பலனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் முக்கியமாக உரங்களை வாங்கும் போது தவறாமல் ரசீது கேட்டு பெறுவதும், மூட்டையில் உள்ள விற்பனை விலையினை சரிபார்த்து வாங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திண்டுக்கல் மாவட்டத்தில் மழையை எதிர்நோக்கி காத்திருக்கும் 2 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள்**

திண்டுக்கல் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், 2 லட்சம் ஏக்கர் நிலங்களில் மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 2 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் உள்ளன. இதில், சுமார் 80 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி காரீப் பயிர்கள் சாகுபடி

செய்யப்படுகின்றன. ஆனால், மாவட்டத்தில் இதுவரை போதிய மழை இல்லாததால், 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் விவசாயப் பணிகள் நடைபெறவில்லை.

இந்த காலக்கட்டத்தில் சராசரியாக பெய்ய வேண்டிய மழை கூட இந்த ஆண்டு இல்லாததால், அனைத்து விவசாய நிலங்களும் வறண்டு காணப்படுகின்றன. நிலக்கோட்டை, வத்தலகுண்டு ஆகிய பகுதிகளில் வைகை அணை கால்வாய் பாசனம் மூலமும், பழனி பகுதியில் கிணற்று நீர் மூலமும் நெல் சாகுபடி மட்டும் தொடங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் 1000 அடிக்கும் கீழ் நிலத்தடி நீர் இறங்கிவிட்டதால், கிணற்றுப் பாசனம் மூலமும் வேளாண் பணிகளை தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வழக்கமாக, நத்தம் பகுதியில் இந்த காலக்கட்டத்தில் நல்ல மழை பெய்து வந்தது. அதன்மூலம், அங்கு முதலாவதாக சாகுபடி பணிகள் தொடங்கப்படும். ஆனால், இந்த ஆண்டு போதிய மழையில்லாததால், அந்தப் பகுதியிலுள்ள சுமார் 40 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் இதுவரை எந்தப் பணிகளும் தொடங்கப்படவில்லை.

மாவட்டம் முழுவதிலும் சுமார் 2 லட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் சாகுபடி பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது என, விவசாய சங்க நிர்வாகி லட்சுமணன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியது: மாவட்டத்தில் 91 ஆயிரம் கிணறுகள் உள்ளன. அவற்றின் மூலமே பெரும்பாலான விவசாய நிலங்களில் சாகுபடி நடைபெற்று வந்தன. இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக சரியாக மழை பெய்யாத காரணத்தால் கடுமையான வறட்சி ஏற்பட்டு, அதனால் குளங்கள், கிணறுகள் காய்ந்து கிடக்கின்றன.

கிணறுகளை தூர்வாருவதற்கு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பயனாளிகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என, மாவட்ட நிர்வாகம் தெரிவித்தது. ஆனால், அதில் பணியாற்றும் பெண்களால் கிணற்றில் இறங்கி வேலை செய்ய முடியாது. அதனால் கிணறுகளை இயந்திரம் மூலம் தூர்வாருவதற்கு மானியம் வழங்குமாறு, விவசாயிகள் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இதனால், கிணறுகளும் தூர்வாரப்படாமல் உள்ளன. இந்த மாத இறுதிக்குள் போதிய மழை பெய்யாமல் போனால், காரீப் பயிர் சாகுபடி முற்றிலுமாக பாதிக்கப்படும் என்றார்.

இது குறித்து, வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, திண்டுக்கல் மாவட்டத்தில் ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரை காரீப் பயிர் காலம். இதில், தற்போது 4 மாதங்கள் முடிந்துவிட்டாலும், இம்மாத இறுதிக்குள் நல்ல மழை பெய்தால், மானாவாரி பயிர்கள் சாகுபடி பாதிப்படையாது.

இந்த காலக்கட்டத்தில் மக்காச்சோளம் 30 ஆயிரம் ஏக்கரிலும், சோளம் 12 ஆயிரம் ஏக்கரிலும், பயறு வகைகள் 15 ஆயிரம் ஏக்கரிலும், எண்ணெய் வித்துக்கள் 10 ஆயிரம் ஏக்கரிலும் சாகுபடி செய்யப்படும். இதனால், விவசாயிகள் மழையை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர் என்றார் அவர்.

**இன்று விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளின் மாதாந்திரக் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூலை 19)நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு, ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமை வகிக்கிறார்.

மேலும் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை,

வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடைத்துறை, வேளாண் விற்பனைத்துறை உள்ளிட்ட அலுவலர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

**பலா தின விழா: விவசாயிகள் பங்கேற்பு**

பலா தினம் 2013 விழா, பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் புதன்கிழமை நடந்தது.

கடலூர் மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் ராமலிங்கம் தலைமையில் நடந்த விழாவில், கோயம்புத்தூர், தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொறுப்பு) முனைவர் சே.மாரியப்பன், கடலூர் மாவட்ட விற்பனைக் குழுச் செயலர் பெ.ஹரிதாஸ் உள்ளிட்ட பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பலா தொழில்நுட்பம் குறித்தும், பராமரிப்பு, நோய் கட்டுப்பாடு, உரமிடல், நீர்ப்பாசனம், நடவு ஆகியவை குறித்து விளக்கினர்.

விழாவில், பங்கேற்ற விவசாயிகள் நோய் தாக்குதல், பராமரித்தல், சந்தையிடுதல் உள்ளிட்ட பிரச்னைகள் குறித்த கேள்விகளையும், தங்களின் அனுபவ கருத்துகளையும்  எடுத்துரைத்தனர்.

இதில் பண்ருட்டி, அண்ணாகிராமம் ஒன்றியம் மற்றும் விருத்தாசலத்தைச் சேர்ந்த பலா விவசாயிகள் பங்கேற்றனர்.

பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் (பொறுப்பு) முனைவர் மு.பாபு வரவேற்றார்.

ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் (பொறுப்பு) முனைவர் இரா.இராஜேந்திரன் விழாவை தொடங்கி வைத்தார்.

பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் (விதை நுட்பவியல்) முனைவர் ஜெ.ரேணுகாதேவி நன்றி கூறினார்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் வெள்ளிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி, சின்னக்கல்லாற்றில் 50 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அறந்தாங்கி, வால்பாறையில் 40 மி.மீ. மழையும், தேவலா, பெரியாறு, குளச்சல் ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

நடுவட்டம், சீர்காழி ஆகிய பகுதிகளில் 20 மி.மீ. மழையும், குழித்துறை, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திருவள்ளூர், பூண்டி, பொள்ளாச்சி, கொள்ளிடம், கூடலூர், தேவக்கோட்டை, காட்டுமன்னார்கோயில் ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**ராயபுரத்தில் மழைநீர் சேகரிப்புப் பேரணி**

மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி, ராயபுரம் பகுதியில் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்ட விழிப்புணர்வுப் பேரணி புதன்கிழமை (ஜூலை 18) நடைபெற்றது.

சென்னை குடிநீர் வாரியம் சார்பில் கடந்த ஒரு மாதமாக மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பிரசாரம் நடைபெற்று வருகிறது.

நகரின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் விழிப்புணர்வு பிரசாரத்தில் 1000-க்கும் மேற்பட்ட குடிநீர் வாரிய ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக சென்னை, ராயபுரத்தில் உள்ள 58 மற்றும் 61-ஆவது வார்டுகளில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. இதில் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

பேரணியில் மழைநீர் சேகரிப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக் கொண்டு மாணவிகள் பிரசாரத்தில் ஈடுபட்டனர். விழிப்புணர்வுப் பேரணியில் மாமன்ற உறுப்பினர் முகமது இம்தியாஸ், குடிநீர் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் அலாவுதீன், பகுதி பொறியாளர் புருஷோத்தமன், உதவி பொறியாளர்கள் பாண்டியன், மகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.07.2013**

## சப்போட்டா, நெல்லி சாகுபடியில் தேனி மாவட்டத்தில் விவசாயிகள்

போடி:தேனி மாவட்டத்தில் விவசாயிகள் சப்போட்டா, நெல்லி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். விளைச்சல் மட்டுமின்றி விலையும் அதிகரித்துள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி, கம்பம் உள்ளிட்ட பல பகுதிகளில் 6 ஆயிரம் எக்டேர் அளவில் மா சாகுபடி நடந்து வருகிறது. தரிசுநில மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மா பயிரிடும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை அரசு மானியம் வழங்கி வருகிறது. சீசன் காலங்களில் மாங்காய்களை வாங்கும் வியாபாரிகள், ரசாயன கற்கள் மூலம் பழுக்க வைத்து விற்பனை செய்கின்றனர். இதனால் பொதுமக்கள், மாம்பழங்களை வாங்க தயக்கம் காட்டுவதால், விற்பனை பாதிப்பு ஏற்படுகிறது. இதோடு மழை, சூறாவளி மாங்காய் உதிர்வதும், கருப்பு அடிப்பதும் விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி வருகின்றன.

கடந்த 5 ஆண்டுக்கு முன்பு வரை மா பயிரிட்டு வந்த விவசாயிகள் பலர், சப்போட்டா, நெல்லி பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சப்போட்டா மற்றும் நெல்லி விவசாயத்தில் மருந்தடிப்பது, களை எடுப்பது, வேலைப்பழுவும் இல்லாமல் உள்ளது. சப்போட்டாவில் நல்ல விளைச்சல் இருப்பதால், வியாபாரிகள் கிலோ எட்டு ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். சில்லரையில் கிலோ 20 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். இதே போல நெல்லி விவசாயிகளிடத்தில், வியாபாரிகள் கிலோ 25 ரூபாய் வரை கொள்முதல்

செய்கின்றனர். சில்லரை யில் ஒரு நெல்லி 3 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். சப்போட்டா, நெல்லியை சாகுபடியில், கடந்த ஆண்டை காட்டிலும், விளைச்சல் மட்டுமின்றி விலையும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### பயறுவகை சாகுபடியில் சிக்கல்

தேனி:தென்மேற்கு பருவமழை குறைந்துள்ளதால், பயறுவகை சாகுபடியில் சிக்கல் எழுந்துள்ளது. ஜூன் மாதம் தொடங்கிய தென்மேற்கு பருவமழை நடப்பு ஆண்டு போதிய அளவு பெய்யவில்லை. ஜூலை இரண்டாவது வாரத்தை கடந்த நிலையிலும், ஓரிரு இடங்களில் சிறிய தூறல் மட்டுமே காணப்படுகிறது. நிலம் ஈரமாகும் அளவுக்கு கூட மழை பெய்யவில்லை.

வழக்கமாக, தென்மேற்கு பருவமழை பெய்த உடன் பயறு வகைகள், சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி தொடங்கும். இவைகள் அனைத்தும் குறுகிய கால பயிர்கள் என்பதால், வடகிழக்கு பருவமழை தொடங்கும் நேரத்தில் அறுவடைக்கு வந்து விடும். ஆனால் நடப்பு ஆண்டு மழை இல்லாததால், பெரும்பாலான இடங்களில் இதன் விதைப்பு பணிகள் நடக்கவில்லை. சாகுபடி பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

### மாவட்டத்தில் நெல் சாகுபடி முறை மாறியும் விளைச்சல் கூலியாட்கள் பற்றாக்குறை, தீராத தண்ணீர் தட்டுப்பாடு

ராமநாதபுரம்;ராமநாதபுரம் மாவட்டத்தில் கூலியாட்கள் பற்றாக்குறையால் நாற்று நடவு முறை குறைந்து, நெல் விதைப்பு மூலம் சாகுபடி அதிகளவில் நடந்து வருகிறது. முந்தைய முறையில் கிடைத்த விளைச்சலை விட, தண்ணீர் தட்டுப்பாடால் தற்போதைய நடைமுறையில் மகசூல் குறைந்துள்ளது. இம்மாவட்டத்தில், ஒரு லட்சத்து 72 ஆயிரம் எக்டேர் விவசாய நிலங்கள் உள்ளன.

இதில், ஒரு லட்சத்து 30 ஆயிரம் எக்டேரில் நெல் விவசாயம் நடக்கிறது. 95 ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் மழையை நம்பியே உள்ளது. ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் பெரிய கண்மாய் பாசனத்தை நம்பி உள்ளன. 20 ஆயிரம் எக்டேரில் நாற்று நடவு பணி நடந்து வருகிறது. திருவாடானை தாலுகா உட்பட தொண்டி அருகே நம்புதாளை, கொடிபங்கு, எஸ்.ஆர்., பட்டணம், பரமக்குடி அருகே பெருங்கரை உள்ளிட்ட கிராமங்களில், பல ஆண்டுகளாக விவசாயிகள் நாற்று நடவு முறையை கடைபிடித்து வருகின்றனர். இம்முறையில் அதிக மகசூல் கிடைத்து வருகிறது. தவிர, களை எடுப்பது, தண்ணீர் பாய்ச்சுவது, உரமிடுவது போன்ற அனைத்து பணிகளும் மிகவும் எளிதாக இருப்பதால், விவசாயிகள் இம்முறையை தொன்று தொட்டு கடைபிடித்து வருகின்றனர். தற்போது கூலியாட்கள் பற்றாக்குறையால், நாற்று நடவு முறை வெகுவாக மாறிவிட்டது. நெல் விதைப்பு முறையே அதிகம் நடக்கிறது.

திருவாடானை விவசாயி சுப்பிரமணியன் கூறுகையில், ""திருவாடானை தாலுகாவில் நேரடி விதைப்பு முறையே அதிகம். போதிய மழை இல்லாததாலும், கண்மாய்கள் மராமத்து இல்லாமல் உள்ளதால் தண்ணீர் தேங்குவதில்லை. இதனால் நாற்று நடவு முறை குறைந்துள்ளது. பொதுவாக இரண்டுக்குமே ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. நாற்றுநடவில் ஒரு ஏக்கருக்கு 40 மூடை மகசூலையும், விதைப்பு முறையில் 30 மூடை மகசூலையும் காணலாம். நாற்றுநடவு முறையில் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை கூடுதல் லாபம் கிடைத்தது. நீர்நிலைகளில் தண்ணீர் தேங்க வசதி செய்தால் மட்டுமே, வருங்காலங்களில் விவசாயம் பெருக வாய்ப்புள்ளது,'' என்றார். வேளாண் இணை இயக்குனர் சக்திமோகன் கூறியதாவது: மாவட்டத்தில் திருவாடானை தாலுகாவில் 42 ஆயிரத்து 500 எக்டேரில் நெல் சாகுபடி நடக்கிறது. நாற்று நடவு முறைக்கு தண்ணீர் அதிகம் தேவை. உரமிடுதல், களை எடுப்பு, அறுவடை எளிது. விதை இடும் கருவி மூலம் நெல் விதைப்பு செய்வதால், ஏக்கருக்கு 30 மூடை மட்டுமே

மகசூல் கிடைக்கும். வறட்சியிலும் நெல் விதைப்பு செய்ய முடியும். ஏக்கருக்கு 20 கிலோ விதைப்பு நெல் இருந்தால் போதுமானது. வரிசை விதைப்பு முறை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம், என்றார்.

### விவசாயிகளுக்கான பயிற்சி கூட்டம்

சாத்தான்குளம்:சாத்தான்குளத்தில் விவசாயிகளுக்கு பண்ணை குட்டை அமைக்கும் பயிற்சி கூட்டம் நடந்தது.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அளவிலான சிறு குறு விவசாய நிலங்களில் பண்ணைகுட்டை அமைப் பதற்கான பயிற்சி முகாம் சாத்தான்குளம் யூனியன் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை உதவித் திட்ட அலுவலர் மைக்கேல் தலைமை வகித்தார். ஒன்றிய ஆணையாளர் சங்கரநாராயணன், பிடிஓ., பாக்கியவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிராம பஞ்.,களில் தகுதி வாய்ந்த இடங்களில் பண்ணைகுட்டை அமைத் தல் பஞ்., ரோட்டோரம் மரக்கன்றுகள் நடுதல் பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. கிராம பஞ்.,தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தீவனங்களின் விலையேற்றம் சந்தையில் மாடு வாங்க தயக்கம்

ஈரோடு: தீவன விலையேற்றம் காரணமாக, மாடுகளை வாங்க கால்நடை வளர்ப்போர் தயக்கம் காட்டுவதால், ஈரோடு சந்தையில் மாடுகள் விற்பனை மந்தமாகவே நடைபெற்றது.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் மாட்டு சந்தை நடக்கிறது. ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள், திருப்பூர், நாமக்கல், சேலம் மாவட்டத்தில் இருந்தும் விலையை எதிர்பார்த்து கால்நடை வளர்ப்போர் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

நேற்று ஜெர்சி, மேர்சியம், சிந்து ரகங்களை சேர்ந்த, 500 பசுக்கள், மூரா, நாட்டு

ரகங்களை சேர்ந்த, 400 எருமைகள் வந்திருந்தன. சென்னை, கள்ளக்குறிச்சி, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, மகராஷ்டிரா மற்றும் கோவா மாநில வியாபாரிகள் வந்திருந்தனர். மாடுகள் வருகை கணிசமாக இருந்தது.

கறவை மாடுகள், 16 ஆயிரம் முதல், 33 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள், 35 ஆயிரம் வரை விலை போனது. மேய்ச்சல் நிலங்கள் காய்ந்து தரிசாக காணப்படுவதால், கால்நடை தீவனங்கள் விலையேற்றத்தால் மாடு வளர்ப்போர் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

தீவன விலை அதிகரித்துள்ள நிலையில், பாலுக்கு கட்டுப்படியாகாத விலையே கிடைக்கிறது. எனவே மாடு வளர்ப்பில் இளைய சமுதாயம், அதிக ஆர்வம் காட்டுவதில்லை. ஏற்கனவே மாடு வளர்ப்பில் ஈடுபடுவோரும், மாடு வளர்ப்பை தொடர தயக்கம் காட்டி வருகின்றனர்.

கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்தி வருவதால், பிற மாநில வியாபாரிகள் அதிக ஆர்வத்துடன் மாடுகளை வாங்கி சென்றனர். ஆனால் வறட்சி, தீவன விலையேற்றம் காரணமாக உள்ளூரில் மாடுகளை வாங்க யாரும் ஆர்வம் காட்டுவதில்லை.

எனவே இந்த வாரம் மாடுகள் விற்பனை சற்று மந்தமாகவே இருந்தது. மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள, சென்னையை சேர்ந்த மோகன் கூறியதாவது:

தீவன விலையேற்றம், பால் விலை குறைவு ஆகிய காரணங்களால், மாடு வளர்ப்பு கேள்விக்குறியாகி வருகிறது. சொந்த இடம் இருப்பதால் மாடுகளை வளர்க்கிறேன். தீவன விலையை அரசு குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

சித்தோட்டை சேர்ந்த விவசாயி சிவக்குமார் கூறியதாவது:

வரத்து அதிகமாக இருப்பதால், விற்பனை மந்தமாகவே உள்ளது. கடும் வறட்சி, தீவன விலையேற்றத்தால் மாடுகளை பராமரிக்க முடியவில்லை. வரும் நாட்களில் விற்பனை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, என்றார்.

## மஞ்சள் வயல்களில் மக்காசோளம் "ஊடுபயிர்' இரட்டிப்பு வருமானத்தில் சத்தி விவசாயிகள்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள், மஞ்சள் வயலில் மக்காசோளம் ஊடுபயிராக நடவு செய்து, இரட்டிப்பு வருமானம் பெறும் யுக்தியை கையாள்கின்றனர்.

சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள், மஞ்சள், வாழை, புகையிலை, கரும்பு, நெல், மல்லிகை போன்ற பயிர்களை அதிகம் நடவு செய்து வருகின்றனர்.

தனியாக ஒரு பயிர் மட்டும் நடவு செய்யும்போது, குறிப்பிட்ட அப்பயிரில் வரும் வருமானம் மட்டுமே, விவசாயிக்கு கிடைக்கும். அதிலும், அப்பயிர் நல்ல விலைக்கு விற்க வேண்டும். அல்லது பெரும் இழப்பு ஏற்படும். இதனால், நடவு செய்யும் பயிருக்குள், ஊடுபயிர்களை அறிமுகம் செய்தனர். குறிப்பாக மஞ்சள் வயலில், ஊடுபயிரை நடவு செய்ய துவங்கினர். ஆரம்பத்தில் உளுந்து, வெங்காயம், பச்சை பயிறு உள்ளிட்ட தானியங்களை மட்டுமே ஊடுபயிராக நடவு செய்தனர்.

தற்போது, தனியாக நடவு செய்யப்படும் மக்காசோளத்தை, மஞ்சள் வயலில் ஊடுபயிராக நடவு செய்கின்றனர். மக்காசோளம் மூன்று மாதங்களில் அறுவடையாகும். மஞ்சளின் தற்போது விலை குறைவாக உள்ளதால், எதிர்காலத்தில் கூடுதல் விலை கிடைக்கும் என்ற நோக்கத்தில், விவசாயிகள் மஞ்சள் நடவு செய்கின்றனர். இந்நிலையில், மக்காசோளம் ஊடுபயிராக நடுவதால், மக்காசோளத்துக்கு நல்ல விலை கிடைப்பதுடன், இரு விதமான வருவாய்க்கு வழி வகுப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ஆடி வெள்ளியை முன்னிட்டு சம்பங்கி விலை அதிகரிப்பு

சத்தியமங்கலம்: இன்று (19ம் தேதி) ஆடிவெள்ளியை முன்னிட்டு, நேற்று சத்தியமங்கலம் பகுதியில் சம்பங்கி பூவின் விலை அதிகரித்தது.

சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் சம்பங்கி பூ அதிகமாக பயிரிட்டுள்ளனர்.

இந்த பூ தற்போது நன்றாக பூத்து குலுங்கி, அறுவடை செய்யப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் வரை ஒரு கிலோ சம்பங்கி பூ, 60 ரூபாய்க்கு விற்பனையானது. இன்று, ஆடி வெள்ளி என்பதால், சத்தியமங்கலம் பகுதியில் சம்பங்கி பூவின் விலை, இரட்டிப்பாகி, ஒரு கிலோ, 120 ரூபாயாக அதிகரித்தது.

சம்பங்கி பூ, மாலைக்கு மட்டுமே அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இன்று ஆடி வெள்ளி என்பதால், அனைத்து அம்மன் கோவில்களிலும் சிறப்பு பூஜைகள் நடப்பது வழக்கம். பெரிய கோவில்கள் மட்டுமின்றி ஒவ்வொரு கிராமங்களில் இருக்கும் கோவில்களிலும் ஆடி வெள்ளி சிறப்பு பூஜை நடப்பதால், சம்பங்கி பூ விலை அதிகரித்துள்ளதாக, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி: கலெக்டர் துவக்கி வைப்பு

பெரம்பலூர்: பெரம்பலூரில் நடந்த பருத்தி மற்றும் மக்காசோளம் மகசூல் பெருக்குவது தொடர்பான தொழில்நுட்ப பயிற்சியை பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தொடங்கி வைத்து பேசியதாவது:

விவசாயிகளின் வாழ்க்கையில் ஏற்றத்தை உருவாக்கும் வகையில் எண்ணற்ற நலத்திட்டங்களை தமிழக முதல்வர் வழங்கி வருகிறார். வேளாண்மைத் துறையின் மூலம் பருத்தி மற்றும் மக்காசோளம் உற்பத்தியில் உள்ள நுணுக்கங்களை விவசாயிகளுக்கு விளக்கும் வகையில்"ஒரு ஹேக்டேரில் ஒரு லட்சம் வருமானம்' என்ற தலைப்பில் தொழில்நுட்ப பயிற்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வரும் ஆக., 1ம் தேதி வரை நடக்க உள்ளது.

விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சியில் 1,150 விவசாயிகள் பயன்பெறுவர். மொத்தம் உள்ள 152 வருவாய் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திற்கு ஐந்து விவசாயிகளுக்கு ஐந்து ஹேக்டேர் மக்காசோளமும், இரண்டு விவசாயிகளுக்கு இரண்டு ஹேக்டேர் பருத்தியும் ஆக மொத்தம் 750 ஹேக்டேரில் மக்காசோளமும், 350 ஹேக்டேரில் பருத்தியும் மகசூல் செய்து விவசாயிகள் பயனடைய வழிவகை

செய்யப்பட்டுள்ளது. இதற்கேற்ப அந்தந்த கிராமத்தில் விவசாயிகளை தேர்வு செய்து மண் பரிசோதனை உட்பட அவர்களின் அடிப்படை புள்ளி விபரம் மற்றும் வரவு செலவை பதிவு செய்து ஒரு ஹேக்டேரில் ஒரு லட்சம் ரூபாய் என குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டுவது பற்றிய தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட உள்ளது. விவசாயிகளின் வேண்டுகோள்படி கிணறு உள்ளவர்களுக்கு சொட்டுநீர் பாசனத்திற்கு மானியமும், காட்டு விலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, விவசாயிகள் அனைவரும் ஆர்வத்துடன் இந்த பயிற்சி பெற்று அதிக மகசூலை ஏற்படுத்தி பயனடைய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதில் வேளாண் மத்திய திட்ட துணை இயக்குநர் பன்னீர்செல்வம், வேளாண் மாநில திட்ட துணை இயக்குநர் சுப்பிரமணியம், கலெக்டரின் வேளாண்மை பிரிவு நேர்முக உதவியாளர் கனகசபை உட்பட பலர் பங்கேற்றனர்.

### குலமாணிக்கம் கிராமத்தில் விவசாயிகள் கலந்துரையாடல்

அரியலூர்: குலமாணிக்கம் கிராமத்தில் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது.

அரியலூர் மாவட்டம், திருமானூர் பஞ்., யூனியனுக்குட்பட்ட குலமாணிக்கம் கிராமத்தில், வேளாண்மைத்துறை மற்றும் இதர துறைகள் இணைந்து நடத்திய, ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி திட்ட தொடக்க விழா மற்றும் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி, மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் நடந்தது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப விநாயக மூர்த்தி வரவேற்றார்.

விழாவில் வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சுப்பையா, வேளாண்துறை திட்ட அலுவலர் மற்றும் இணை இயக்குநர் சங்கரலிங்கம், நடவியல்துறை இணை இயக்குநர் அழகிரிசாமி, உதவி

செயற்பொறியாளர் ராஜேந்திரன், சமூகவியல் உதவி இயக்குநர் கண்ணன் மற்றும் மீன்வளத்துறை, வனத்துறை, மின்சார வாரியம், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயில் 800 கனஅடிநீர் 15 நாட்களுக்கு திறப்பு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, கிழக்கு, மேற்கு கால்வாய் பாசன பகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கவும், குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்கவும் வினாடிக்கு, 800 கனஅடி நீர் நேற்று காலை திறக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் இருந்து, மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயில் ஆண்டுதோறும் ஆகஸ்ட், 1ம் தேதி முதல் டிச.,15ம் தேதி வரை, 137 நாள் வினாடிக்கு, 1,000 கனஅடி வீதம் மொத்தம், 9.608 டி.எம்.சி., நீர் திறக்கப்படும். இதன் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டத்தில், 45,000 ஏக்கர் பாசன வசதி பெறும்.

கடந்த ஆண்டு மேட்டூர் அணை நீர்மட்டம் குறைவாக இருந்ததால், கால்வாய் பாசனத்துக்கு நீர்திறக்கவில்லை. நிலத்தடி நீரை அதிகரிப்பதற்காக, 2012 ஜூலை, 8 முதல், 18 ம் தேதி வரை, பத்து நாள், 400 கனஅடி வீதம், 0.381 டி.எம்.சி., நீரும், 2012 செப்டம்பர், 26 முதல் அக்டோபர், 10 வரை, 15 நாள், 700 கனஅடி வீதம், 0.793 டி.எம்.சி., நீரும் திறக்கப்பட்டது.

பாசனத்துக்கு நீர்திறக்காததால், கடந்த ஆண்டு கிழக்கு, மேற்கு கால்வாய் பகுதியில் சாகுபடி பணி பாதித்தது. வறட்சியினால், நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து விட்டது. இந்நிலையில், தென்மேற்கு பருவமழையால் நீர்மட்டம் அதிகரித்ததால், நேற்று காலை மேட்டூர் அணையில் இருந்து, கிழக்கு, மேற்கு கால்வாயில் நீர் திறக்கப்பட்டது.

மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் குமரேசன், செயற்பொறியாளர் கந்தசாமி, கால்வாய் பிரிவு உதவி செயற்பொறியாளர் தேவராஜன் அணையில்

இருந்து தண்ணீரை கால்வாயில் திறந்து வைத்தனர்.

கிழக்கு, மேற்கு கால்வாய் பாசன பகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கவும், குடிநீர் பற்றாக்குறை போக்கவும்,, ஜூலை, 18 முதல், தொடர்ந்து, 15 நாட்களுக்கு வினாடிக்கு, 800 கனஅடி வீதம் நீர்திறக்கப்படும் என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரூ.68 மானியம் வழங்கிய அதிகாரிகள் தக்காளி பயிரிட்ட விவசாயி அதிர்ச்சி

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டியில், தக்காளி பயிரிட்ட விவசாயி ஒருவருக்கு, தோட்டக்கலைத்துறை சார்பில், அரசு மானியமாக வெறும், 68 ரூபாய்க்கு செக் வழங்கப்பட்டது. அரசு வழங்கிய மானிய தொகை, வங்கி கலெக்ஷன் சார்ஜ்க்கு கூட தேறாது என்பதால், விவசாயி அதிர்ச்சியடைந்தார்.

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி அருகே களரம்பட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயி ஆண்டியப்பன், 70. தக்காளி பயிர் செய்தால், தோட்டக்கலைத்துறை மூலம் மானியம் வழங்கப்படும் என, அத்துறையினர் தெரிவித்தனர். அதனால், இவர், கடந்த சித்திரை மாதம், தக்காளி பயிரிட, தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் விதை வாங்கி, நடவு செய்தார். அரசு வழங்கும் மானிய தொகையை, விவசாயி எதிர்பார்த்திருந்தார்.

ஆனால், நான்கு மாதம் கழித்து, கடந்த, 15ம் தேதி, தோட்டக்கலைத்துறை சார்பில், வெறும், 68 ரூபாய்க்கு மானியம் கொடுத்து, அதற்கான செக்கை, விவசாயி ஆண்டியப்பனுக்கு வழங்கினர். சேலம் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர், ஏப்ரல், 24ம் தேதி கையெழுத்து போட்ட செக், மூன்று மாதங்கள் கழித்து, ஜூலை, 15ம் தேதி வழங்கப்பட்டது. அரசு மானியம் என்ற பெயரில், 68 ரூபாய் கொடுத்ததால், விவசாயி ஆண்டியப்பன் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

விவசாயி ஆண்டியப்பன் கூறியதாவது:

தக்காளி பயிரிட, ஏர் உழவு, நாற்று விடுதல், பார் அணைத்தல், செடி நடவு, களை

பறித்தல் என, நான்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு ஆகிவிட்டது. தற்போது, மானியம் என, வெறும், 68 ரூபாய்க்கு செக் வழங்கினர்.

இந்த செக், சேலம் டவுனில் உள்ள ஒரு வங்கிக்கு வழங்கப்பட்டது.

தோட்டக்கலைத்துறையினர் கொடுத்த மானிய செக்கை, வங்கி கணக்கில் போட்டால், கலெக்ஷன் சார்ஜ் கூட தேறாது.

தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், தொடர்ந்து ஒரு சில விவசாயிகளுக்கு அரசு மானியங்களை அள்ளிவிடுகின்றனர். எங்களை போன்ற ஏழை விவசாயிகளுக்கு தேவையான மானிய உதவிகளை செய்வதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## மணல் கொள்ளையர்களால் அழிந்த மலட்டாறு நீர்ஆதாரம் பாதிப்பு: விவசாயம் கேள்விக்குறி

முதுகுளத்தூர்:முதுகுளத்தூர் பகுதியில் அரசு குவாரி என்ற போர்வையில், ஆறுகளில் அளவுக்கு அதிகமாக தோண்டி எடுக்கபட்ட மணலால், நீர் ஆதாரம் பாதிக்கபட்டு, ஆறுகள் உருக்குலைந்துவிட்டன. முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதி விவசாய நிலங்களின், பிரதான நீர் ஆதாரமாக இருப்பது, மலட்டாறு, குண்டாறு. இதிலிருந்து பிரிந்து உருவானது ரகுநாதகாவிரி ஆறு.

ஆற்றுப்படுகைகளில் குவாரிகள் செயல்பட அதிகாரிகள் அனுமதி வழங்குகின்றனர். ஆறுகளில் மூன்று அடி ஆழத்துக்கு மணல் எடுக்க வேண்டும் என்பது அரசு விதி. ஆனால், 50 அடி ஆழம் வரை மணலை சுரண்டுகின்றனர். ஆறுகள் இருந்த இடம் தெரியாமல், பள்ளங்களாகிவிட்டன. ஆற்றுபடுகைகளில் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் நீர் வற்றிவிட்டது. கருவேல மரங்கள் அடர்ந்து ஆறு காடாய் மாறிவிட்டது. இதில் மழைநீர் வழிந்தோடி வரவும் வாய்ப்பில்லை. வந்தாலும் அவற்றை கருவேல மரங்கள் உறிஞ்சிவிடுகின்றன. முதுகுளத்தூர், கமுதி, கடலாடி தாலுகாக்களில் உள்ள, 30 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில், விவசாயம் கேள்விக்குறியாகி உள்ளது. கிடாத்திருக்கை

விவசாயி வழிவிட்டான் கூறுகையில், ""ஆற்றுப்படுகைகளில் செயல்படும் குவாரிகளால் வருவாய் கிடைக்கிறது. ஆனால், ஆறுகள் பராமரிக்கப்படுவதில்லை. விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது, என்றார். பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""நிதி கோரப்பட்டுள்ளது. வந்தவுடன், நீர்நிலைகள் சீரமைக்கப்படும்," என்றார்.

## பண்ணை குட்டை அமைக்க தயக்கம் : விவசாயிகளிடம் ஆர்வமில்லை

அன்னூர் : அரசின் மானியத்துடன் பண்ணை குட்டை அமைக்க விவசாயிகளிடம் அதிக ஆர்வம் இல்லை.

தமிழகத்தில், பருவமழை குறைந்து, நிலத்தடி நீர் மட்டம் 1,000 அடிக்கும் கீழ் சென்று விட்டது. பயிரிடும் பரப்பும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. விவசாய பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தி திறனை உயர்த்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியம் வழங்குகிறது. இப்போது பண்ணை குட்டை திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தில், சிறு, குறு விவசாயிகள் தங்கள் தோட்டத்தில், 15 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம், ஒரு மீட்டர் ஆழம் கொண்ட பண்ணை குட்டை அமைக்க 67 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தோட்டத்து பரப்பு அதிகமாக இருந்தால், 15 மீட்டருக்கு, 30 மீட்டர் அல்லது 15க்கு 40, 30க்கு 30 என தங்கள் வசதி போல் அமைத்துக் கொள்ளலாம். இதற்கு அதிகபட்சமாக ஒன்றரை லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.

துணை பி.டி.ஓ., ரவீந்தரன் கூறுகையில், ""ஆர்வமுள்ள விவசாயிகள், சிட்டா, கூட்டு வரை படம், அடங்கல், "அ' பதிவேடு நகல், நிலத்தின் புகைப்படம் ஆகியவற்றுடன் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்தது ஐந்து பேருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. பண்ணை குட்டை அமைப்பதன் மூலம்,

சுற்றுவட்டாரத்தில், நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும். விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயன்பெறலாம்," என்றார். கடந்த இருமாதங்களாக ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளும், வேளாண் துறை அதிகாரிகளும் பல முறை தெரிவித்தும் பெரும்பாலான ஊராட்சிகளில் தலா இரண்டு விண்ணப்பங்கள் கூட வரவில்லை.  விவசாயிகள் கூறுகையில், ""பண்ணை குட்டை அமைக்க, குழி தோண்ட, தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். பொக்லைன் உள்ளிட்ட இயந்திரங்களை பயன்படுத்தி, பண்ணை குட்டை அமைக்க அரசு அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால், மானியத் தொகையை ரொக்கமாக கொடுத்தால், நாங்கள் வழக்கமாக வேலை செய்யும் தொழிலாளர்களை வைத்து குழி தோண்டி குட்டை அமைத்துக் கொள்கிறோம். அரசு அதிகாரிகள் இதற்கு அனுமதி அளித்தால், அதிக அளவில் விவசாயிகள் பண்ணை குட்டை அமைக்க முன்வருவர்' என்றனர்.

## நாட்டின் காபி பயன்பாடு 72,000 டன்னாக உயரும்

இந்தியாவில் காபி பயன்பாடு, நடப்பு 2013-14ம் நிதியாண்டில், 72 ஆயிரம் டன் (12 லட்சம் மூட்டைகள்) என்ற அளவில் உயரும் என, அமெரிக்க வேளாண் அமைச்சகம் (யு.எஸ்.டீ.ஏ.,) வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:சென்ற 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் காபி பயன்பாடு, 66 ஆயிரம் டன் (11 லட்சம் மூட்டைகள் - 1 மூட்டை=60 கிலோ) என்ற அளவில் குறைந்து காணப்பட்டது.

**காபி உற்பத்தி:**சென்ற நிதியாண்டுக்கு முன்பாக, தொடர்ந்து ஐந்து நிதியாண்டுகளில், இந்தியாவின் காபி பயன்பாடு, சராசரியாக, 72 ஆயிரம் டன்னாக இருந்தது.சென்ற நிதியாண்டை விட, நடப்பு நிதியாண்டில், காபி பயன்பாடு அதிகரித்து வருவதற்கான அறிகுறி தென்படுகிறது. நாட்டின் காபி

பயன்பாடு, ஆண்டுக்கு சராசரியாக, 1-2 சதவீதம் வளர்ச்சி கண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக, காபி உற்பத்தி, ஏற்ற, இறக்கமின்றி காணப்படும் நிலையிலும், நடப்பு நிதியாண்டை பொறுத்தவரை, அதன் பயன்பாடு அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

வரும் அக்டோபரில் துவங்கும் காபி பருவத்தில், அதன் உற்பத்தி, 3.12 லட்சம் டன் (52 லட்சம் மூட்டைகள்) என்ற அளவில் இருக்கும். கடந்த மூன்று ஆண்டுகளாக, இந்தியாவின் காபி உற்பத்தி, ஆண்டுக்கு சராசரியாக, 50 - 52 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் உள்ளது.நடப்பு நிதியாண்டில், மொத்த காபி உற்பத்தியில், அராபிகா வகை காபியின் பங்களிப்பு, சாதனை அளவாக, 17 லட்சம் மூட்டைகளாகவும், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி, 35 லட்சம் மூட்டைகளாகவும் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், சர்வதேச காபி உற்பத்தி, சென்ற நிதியாண்டை விட, 44 லட்சம் மூட்டைகள் குறைந்து, 14.60 கோடி மூட்டைகளாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மத்திய அமெரிக்கா மற்றும் மெக்சிகோவின் சில பகுதிகளில், பூச்சி தாக்குதலால், காபி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. பிரேசில் நாட்டிலும், இதன் உற்பத்தி குறையும் என, தெரிகிறது. இதனால், ஒட்டுமொத்த அளவில், சர்வதேச காபி உற்பத்தி, குறையும் என, மதிப்பிடப் பட்டுள்ளது.இந்தியாவை பொறுத்தவரை, காபி விவசாயத்தில், மூலப்பொருட்களுக்கான செலவினம் அதிகரித் துள்ளது. உரங்கள் மற்றும் டீசலுக்கான மானியம் ரத்து, போன்றவற்றால், காபி விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

**வேலைவாய்ப்பு:**காபி உற்பத்தி செலவில், தொழிலாளர்களின் கூலிச் செலவினம், 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. வேளாண் சாராத இதர துறைகளில் பெருகி வரும் வேலைவாய்ப்புகள் காரணமாக, தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.காபி விவசாயத்தில், இயந்திரமயமாக்கல் பின்பற்றாமை, சீரற்ற

மழைப் பொழிவு, சிறிய மற்றும் ஆங்காங்கே சிறு சிறு தொகுதிகளாக பிரிந்து கிடக்கும், காபி செடி வளர்ப்பு பகுதிகள் போன்ற வற்றாலும், இந்திய காபி உற்பத்தி மந்தமடைந்துள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனிடையே, யு.எஸ்.டீ.ஏ.,-ன் காபி பயன்பாடு குறித்த புள்ளி விவரம், இந்திய காபி வாரியத்தின் முன்கூட்டிய மதிப்பீட்டை விட, குறைவாக உள்ளதாக, இந்திய காபி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.07.2013**

## ஒரு டன் கி13 ஆயிரம் மரவள்ளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்திவேலூர்: பரமத்தி வேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தாலுகா, பெருங்குறிச்சி, உப்புப்பாளையம், குப்பிரிக்காபாளையம், சுள்ளிப்பாளையம், தடும்லி, தி.கவுண்டம் பாளையம், சிறு நல்லிக்கோவில், மற்றும் கபிலர் மலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ராஜ வாய்க்கால் மற்றும் காவிரியில் தண்ணீர் இல்லாத நிலையில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி மிகவும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. இதனால் உற்பத்தி பாதித்துள்ளது. மேலும் கொல்லிமலை பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்கு அதிக அளவு வெளிமார்க்கெட்டிற்கு செல்கிறது. கடந்த சில வாரங்களாக மரவள்ளிக்கிழங்கு ஒருடன் கி 9000 ஆயிரம் வரை விற்பனை ஆனது. தற்போது மரவள்ளிக்கிழங்கு விலை ஒரு டன் கி 13ஆயிரம் வரை விற்பனை ஆகிறது. மரவள்ளிக்கிழங்கின் சத்து அடிப்படையில், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் மூலம் தற்போது உற்பத்தி குறைவானதால் மரவள்ளிக்கு விலை உயர்ந்துள்ளது. இதனால் மரவள்ளிகிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பலத்த காற்று 500 ஏக்கர் வாழை சேதம் விவசாயிகள் கவலை

ரூர்: கரூர் பகுதியில் ஆடிக்காற்று வீச துவங்கியுள்ளதால் இது வரை 500 ஏக்கர் வரை வாழை சேதம் அடைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் காவிரி பாசன பகுதியான புகழூர் வட்டாரத்தில் உள்ள கிராமங்கள், கிருஷ்ணராயபுரம் பகுதியில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கிணற்று நீரைப்பயன்படுத்தி வாழை விவசாயிகள் பயிரை காப் பாற்றி வருகின்றனர். அம ராவதி பாசன பகுதியான கரூர் சின்ன ஆண்டாங்கோயில் மேற்கு பகுதி, விசுவநாதபுரி பகுதி கிராமங்கள் உள்பட ஆயிரக்கணக்கான ஏக்கரில் கிணற்றுப்பாசனத்தில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாழை இலைகள் மற்றும் தண்டு பயன்பாட்டிற்காக மோட் டார் மூலமாக வாழை மரங்களை அதிகளவில் வளர்க்கப்படுகிறது.

ஆடி மாதம் பிறந்துள்ளதால் காற்றும் பலமாக வீச துவங்கியுள்ளது. இதை யொட்டி கரூர் மாவட்டத்தில் கடந்த சில நாட் களாக பலத்த காற்றுவீசி வருகிறது. இதனால் காற்றாலைகளில் மின்உற்பத்தி பெருகி வருகிறது. இன்னொருபுரம் வாழைப்பயிர்கள் சேதம் அடைந்து வருகின்றன. வாழைகளுக்கு மரக்குச்சியால் முட்டுக் கொடுத்து வருகின்றனர். ஆனால் இலைகள் கிழிந்து வருகின்றன. இதுவரை 500 ஏக்கர் வரை வாழைகள் சேதமடைந்துள்ளன.

இதுகுறித்து விவசாயி சுப்பிரமணியன் கூறுகை யில், வாழைப்பயிர் ஒருவருட பயிர். போது மான தண்ணீர் இல்லாததால் வழக்கமாக சாகுபடிசெய்பவர்கள் இம்முறை பயிரிடவில்லை. அதையும் மீறி வாழையை சிறிய பரப்பளவில் சாகுபடிசெய்யப்பட்டது. காய் பழம், வாழைப்பூ விளைச்சலோ விற்பனை செய்யவோ, வழியில்லை என்றாலும் இலை முதிர்ந்ததும் அறுத்து விற்பனை செய்யலாம். அதன்பின்னர் வாழைமரத்தை விற்பனை செய்ய லாம் என நினைத்தோம். காற்று பலமாக வீசுவதால் குச்சிகளால் எவ்வளவோ

முட்டுக்கொடுத்தும் பயனற்றுப் போய்விட்டது. வாழைகள்தொடர்ந்து சேதமாகிறது. இதனால் நஷ்டம் தான் ஏற்படும். வாழை சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.1 லட்சம் செலவாகிறது. வாழை சேதத்திற்கு இன் னும் இழப்பீடு வழங்கப்படவில்லை  என்றார்.

**நிலக்கடலை, குச்சி கிழங்கு சூரியகாந்தி சாகுபடி பயிற்சி விவசாயிகள் ஆர்வம்**

தோகைமலை: தரகம்பட்டியில் நிலக் கடலை, குச்சி கிழங்கு, சூரிய காந்தி போன்ற பயிர் சாகுபடி பயிற்சி நடந்தது. தரகம்பட்டியில் வேளாண்மை துணை இயக் குநரகம் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் கிராமப்புற ஏழை மக்க ளுக்கு பயிர் சாகுபடி பயிற்சி நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் ஜெயந்தி தலை மை வகித்தார். வேளாண் துணை இயக்குனர்கள் (மத்திய திட்டம்) சவுந்தரம், மதன கோபால், வேளாண் அலுவலர் பாலுச்சாமி ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி அளித்தனர்.முக்கிய பயிர்களான நிலக்கடலை, குச்சி கிழங்கு, சூரியகாந்தி ஆகியவற்றை சாகுபடி செய்தல் குறித்து செயல் விளக்கம், தொழில்நுட்ப ஆலோ சனை மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டது. ஏற்பாடு களை உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளர் மாணிக்கம் செய்திருந்தார். அட்மா திட்ட பணியாளர்கள் தனபால், போதும் பொண்ணு, சரவணன் மற்றும் பொதுமக்கள், விவசாயிகள் ஆர்வமுடன் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

**6 லட்சத்தில் பழவாறு வாய்க்கால் தூர்வாரும் பணிகள்**

திருவிடைமருதூர்: பழவாறு வாய்க்கால் தூர்வாரும் பணிகள் ரூ.6 லட்சத்தில் துவங்கப்பட்டுள்ளது. திருப்புறம்பியத்தில் தொடங்கி குடிதாங்கி, மேலாத்துகுறிச்சி, கொத்தங்குடி, அத்தியூர், நீலத்தநல்லூர், மணல்மேடு, காவற்கூடம் வழியாக குருகூர் வரை 8 கிமீ தூரம் செல்லும் பழவாறு வடிகால் வாய்க்கால் சுற்று வட்டார கிராமங்களின் மழை மற்றும் வெள்ளநீர் வடிவதற்கும், திருவைக்காவூர், கொந்தகை

மற்றும் மேற்கு பகுதிகளில் இருந்து வடியும் மழைநீரை வெளியேற்றுவதற்கும் பயனுள்ளதாக உள்ளது. கடந்த 2005ம் ஆண்டு பெய்த கடும் மழையின் காரணமாக பழவாற்றில் தண்ணீர் வடிய முடியாமல் வெள்ளம் ஏற்பட்டு 5 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் நெல், பருத்தி, கரும்பு, வாழை பயிர்கள் அழுகி நாசமாகின. இதனால் பழவாறு வாய்க்காலை தூர்வாரி வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். 22 ஆண்டுகளுக்கு முன் இந்த வாய்க்கால் தூர்வாரப்பட்டது.

இந்நிலையில் இந்த வாய்க்காலை ரூ.6 லட்சத்தில் தூர்வாரும் பணியை நீர்வள ஆதார துறை உட்கோட்ட பொறியாளர் பாரி நேற்று தொடங்கி வைத்தார். உதவி பொறியாளர் ரவீந்திரன் மேற்பார்வையில் 3மீ அகலம் 2 அடி ஆழம் பொக்லைன் மூலம் பழவாறு வாய்க்கால் தூர்வாரப்படுகிறது. 15 நாளில் பணிகளை செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**2 லட்சம் கால்நடைகள் பயன் அமைச்சர் தகவல்**

தஞ்சை: தஞ்சை மாவட்டத்தில் இதுவரை நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில் 6,120 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளது. 2 லட்சத்து 3 ஆயிரத்து 234 கால்நடைகள் இதனால் பயனடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு அடுத்த கக்கரை ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாமை அமைச்சர் வைத்திலிங்கம் தொங்கிவைத்தார். அவர் பேசியதாவது: தஞ்சை மாவட்டத்தில் கால்நடைகளை பராமரிக்கும் பயனாளிகளின் இடத்திற்கே சென்று அனைத்து பராமரிப்பு மற்றும் மருத்துவ சேவை களை அளிக்கும் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடப்பாண்டில் 204 முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூ.8 லட்சம்

நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இந்த முகாமில் இலவச வெள்ளாடு வழங்கும் திட்டத்தின்கீழ் 390 வெள்ளாடுகளுக்கு தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கமும், 30 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 180 கோழிகளுக்கு வெள்ளைக்கழித்தல் நோய் தடுப்பூசியும், 126 மாடுகளுக்கு நோய் தடுப்புக்கான சிகிச்சைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இரு பயனாளிகளுக்கு தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் ரூ.17,750 மதிப்புள்ள புல் நறுக்கும் கருவிகள், 75 சதவீத மானியத்தில் ரூ.13,163 மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரண திட்டத்தில் வளர்க்கப்பட்ட தீவன சோளப்பயிர்கள் 50 சதவீத மானிய விலையில் தலா 20 கிலோ 25 பயனாளிகளுக்கும், 200 பயனாளிகளுக்கு இலவச தீவனப்புல் கரணைகள் வழங்கப்பட்டுள்ளது.இதுவரை தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில் 6,120 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளது. 2 லட்சத்து 3 ஆயிரத்து 234 கால்நடைகள் இதனால் பயனடைந்துள்ளன. இதன்மூலம் 36 ஆயிரத்து 729 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். இம்முகாம்களுக்காக ரூ.8 லட்சத்து 56 ஆயிரத்து 800 செலவிடப்பட்டுள்ளது. கிராமப்புற விவசாயிகள் இதுபோன்ற நல்ல திட்டங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.
மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், மாவட்ட கூட்டுறவு பால்வள தலைவர் காந்தி, மாவட்ட கவுன்சிலர் குருசேவ், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் முகமதுகனி, துணை இயக்குநர் சுகுமாறன், உதவி இயக்குநர்கள் நெடுஞ்செழியன், ராஜகோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**மீத்தேன் வாயு திட்டத்திற்கு தற்காலிக தடை டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கினர்**

மன்னார்குடி: மன்னார்குடி மீத்தேன் திட்டத்திற்கு தமிழக அரசு இடைக்காலத்தடை விதித் துள்ளதற்கு மன்னார்குடியில் விவசாயிகள் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும்மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியை மையப்படுத்தி சுமார் 766 சதுர கிமீ பரப்பளவிற்கு உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலக்கரி படிமத்தின் மீது மீது மீத்தேன் வாயு படர்ந்துள்ளது. அதனை வணிக ரீதியாக எடுத்து விற்பனை செய்வதற்காக அரியானா மாநிலத்தை சேர்ந்த கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி என்ற தனியார் நிறுவனத்திற்கு மத்தியஅரசு டெண்டர் விட்டுள்ளது. அதன்படி, தொடர்ந்து 25 ஆண்டுகள் மீத்தேன் வாயுவை வெளிக்கொணர்ந்து வணிக ரீதியான பயன்பாட்டை செய்துகொள்ள அந்த நிறுவனத்திற்கு உரிமை உள்ளது. திருவாரூர், தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரை விவசாய தொழில் தான் அடிப்படையானது. விளைநிலங்கள் தண்ணீரின்றி பாதிக்கப்படும். குடிநீர் ஆதாரம் பாதிக்கப்படும். மீத்தேன் வாயுவை எடுக்க பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் தமிழக அரசு மீத்தேன் திட்டத்திற்கு தடை விதித்தும், அதுபற்றி ஆராய வல்லுனர்கள் குழு ஒன்றை அமைத்தும் உத்தரவிட்டுள் ளது. இதன்மூலம் மீத்தேன் திட்ட எதிர்ப்பாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மன்னார்குடி பஸ்நிலையம் அருகே தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர், மாவட்ட துணைச் செயலாளர் பி.ஆர். பாண்டி யன் தலைமையில் மன்னார்குடி விவசாய சங்க மன்னார்குடி நகர செயலா ளர் பக்கிரிசாமி, கோட்டூர் ஒன்றிய செயலா ளர் சவுந்தர்ராஜன், திருவா ரூர்

மாவட்ட இளைஞர் மன்ற தலைவர் நாகேஷ், மன்னார்குடி சிபிஐ கட்சி நகர செயலாளர் கலைச்செல்வன், ஏஐடியூசி பார்த்திபன், மன்னார்குடி ஆட் டோ ஓட்டுனர்கள் சங்கம் சரவணன் மற்றும் சமூக ஆர்வலர்கள் விவசாயிகள் ஒன்று பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சி வெளிப்படுத்தினர். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்ட துணை செயலாளர் பிஆர்.பாண்டியன் கூறுகையில். மீத்தேன் திட்டத்திற்கு தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்கிறோம்.

இத்திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்திவரும் விவசாயிகளுக்கு தற்போது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. கோவில்கள் மற்றும், புராதன சின்னங்கள், நீராதாரங்கள், விளை நிலங்களை பாதிக்கின்ற திட்டமாக மீத்தேன் எடுக்கிற திட்டம் உள்ளது. இந்த திட்டத்தை கைவிடக்கோரி மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், உள்ளிட்ட போராட்டங்களை நடத்தி வருகி றோம். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்து இருக்கிறோம். மேலும் தமிழக முதல்வருக்கு இத்திட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கோரிக்கை வைத்திருந்ததன் அடிப்படையில் தமிழக முதல்வர் தற்காலிகமாக தடை செய்துள்ளார். வல்லுனர்குழு அமைத்து ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளார். வர இருக்கிற வல்லுனர் குழு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும் ஓரிடத்தில் சந்தித்து அவர்களின் கருத்தையும் அறிந்து இத்திட்டத்திற்கு நிரந்தர தடை ஏற்படுத்த வேண்டும். தொடர்ந்து இத்திட்டத்தை ரத்து செய்யும் வரை மத்திய அரசை கண்டித்து விவசாயிகள் நடத்துகிற போராட்டத்திற்கு ஆதரவாக தமிழக அரசு செயல்பட வேண்டும் என்றார்